

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் சென்னை, தேனாம் பேட்டையில் அப்பல்லோ ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் அதிநவீன கேத் லாப் (CATH LAB) – I 13.08.2025 அன்று திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் ஹர்ஷத் ரெட்டி, இயக்குனர் – குழு புற்றுநோய் சர்வதேச பிரிவு, மது சசிதர், தலைவர் & தலைமைச் செயல் அலுவலர், அப்பல்லோ மருத்துவமனைகள், மற்றும் மருத்துவர் ஏ.எல்.நாராயணன், பிரிவு தலைவர் & தலைமை, இடையூறு இதயநோய் பிரிவு ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஜூன் 15 முதல் 17, 2025 வரை கனடாவால் நடத்தப்பட்ட 51வது G7

# உச்சி மாநாட்டிற்கு ஒன்றியப் பிரதமர் அழைக்கப்பட்டார் என்பது உண்மையா?

## மக்களவையில் - முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!

புதுடெல்லி, ஆக.15-

ஜூன் 15 முதல் 17, 2025 வரை கனடாவால் நடத்தப்பட்ட 51வது G7 உச்சி மாநாட்டிற்கு ஒன்றியப் பிரதமரும் அழைக்கப்பட்டார் என்பது உண்மையா? இந்தியா G7 நாடுகளில் உறுப்பினராக இல்லாவிட்டாலும், 2019 முதல் G7 உச்சி மாநாடுகளுக்கு வழக்கமான அழைப்பாளராக இருந்தால், அதன் விவரங்கள் என்ன? உச்சிமாநாட்டின் போது விவாதிக்கப்பட்ட பல்வேறு நிகழ்ச்சி நிரல், உச்சிமாநாட்டின் முடிவு மற்றும் உச்சிமாநாட்டின் போது ஜி7 நாடுகளுடன் ஒன்றியப் பிரதமர் ஏதேனும் இருதரப்பு சந்திப்பை



நடத்தினார் என்றால், அதன் விவரங்கள் என்ன என்று மக்களவையில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பினார்.

வெளியுறவுத்துறை அமைச்சகத்தில் மாநில அமைச்சர் ஸ்ரீ பபித்ரா மார்கெரிதா கூறியதாவது: ஒன்றியப் பிரதமர் நரேந்திர மோடி, கனடாவின் ஆல்பர்ட்டாவில் உள்ள கனனாஸ்கிஸில் 1617 ஜூன் 2025 வரை G7 உச்சிமாநாட்டில், அதிகாரப்பூர்வமான அவுட்ரீச் பார்ட்னராக பிரதமர் மார்க் கார்னியின் அழைப்பின் பேரில் பங்கேற்றார். ஒன்றியப் பிரதமர் ஜி7 உச்சிமாநாட்டில் அழைக்கப்பட்ட பிற நாடுகளுடன் இணைந்து எரிசக்தி பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் புதுமை, குறிப்பாக அல்எனர்ஜி நெக்ஸஸ் மற்றும் குவாண்டம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட முக்கியமான தலைப்புகளைப் பற்றி விவாதித்தார்.

இரண்டு விளைவு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன (I) 'கனனாஸ்கிஸ் காட்டுத்தீ சாசனம்' மற்றும் (II) 'ஜி7 கிரிட்டிகல் மினரல்ஸ் செயல் திட்டம்'.ஒன்றிய பிரதமர் மெக்சிகோ ஜனாதிபதியுடன் இருதரப்பு சந்திப்புகளை நடத்தினார்.

டாக்டர். கிளாடியா ஷீன்பாம் பார்டோ, ஜெர்மனியின் பெடரல் குடியரசின் அதிபர் ஹெச். இ. ஃபிரெட்ரிக் மெர்ஸ் மற்றும் கனடா பிரதமர் ஹெச்.இ. மார்க் கார்னி, ஆல்பர்ட்டாவின் கனனாஸ்கிஸில் G7 உச்சிமாநாட்டின் ஓரமாக என்று பதில் கூறினார்.

### மண்டலம் 5, 6, 8, 9, 10 ஆகிய பகுதிகளில்

# மெட்ரோ ரயில் பணியால் குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, ஆக.15-

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) அண்ணா நகர் மண்டலம், புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் குடிநீர் பிரதான குழாய் இணைக்கும் பணிகளை மேற்கொள்வதால் 18.08.2025 அன்று காலை 08.00 மணி முதல் 19.08.2025 அன்று காலை 08.00 மணி வரை (24 மணி நேரம்) மண்டலம்-5 (இராயபுரம்), மண்டலம்-6 (திரு.வி.க நகர்), மண்டலம்-8 (அண்ணா நகர்), மண்டலம்-9 (தேனாம்பேட்டை) மற்றும் மண்டலம்-10 (கோடம்பாக்கம்) உட்பட்ட கீழ்கண்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம் பகுதிகள் மண்டலம்-5 (இராயபுரம்) புரசைவாக்கம், பெரியமேடு, சௌகார்பேட்டை, எழும்பூர், சிந்தாதிரிபேட்டை, மண்டலம்-6 (திரு.வி.க நகர்) ஓட்டேரி, அயனாவரம், பெரம்பூர், செம்பியம், மண்டலம்-8 (அண்ணா நகர்) கீழ்ப்பாக்கம், வில்லிவாக்கம், கெல்லிஸ், மண்டலம்-9 (தேனாம்பேட்டை) திருவல்லிக்கேணி, மண்டலம்-10 (கோடம்பாக்கம்) தி.நகர், சைதாப்பேட்டை,

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (DIAL FOR WATER) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் HTTPS://CMWSSB.TN.GOV.IN என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

### சிவகங்கை மாவட்ட தி.மு.க. முன்னாள் துணைச் செயலாளர்

# கே.எஸ்.எம்.மணிமுத்து முதலாம் ஆண்டு நினைவு நாள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டம்!

சிவகங்கை, ஆக.15 -

சிவகங்கை மாவட்ட கழகத் துணைச் செயலாளர், முன்னாள் சிவகங்கை நகர் மன்ற துணைத் தலைவர் மற்றும் காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவர் கே.எஸ்.எம்.மணிமுத்து, இவர் கடந்த ஆண்டு 2024 ஆகஸ்ட் 15ஆம் தேதி இயற்கை யெய்தினார்.

இவரது நினைவினைப் போற்றும் வகையில் முதலாவது ஆண்டு நினைவஞ்சலி கூட்டம் இன்று (15.08.2025 - வெள்ளிக்கிழமை) மாலை ஐந்து முப்பது மணி அளவில் சிவகங்கையில் திருப்பத்தூர் சாலையில் உள்ள கலைஞர் மாளிகையில் நடைபெறுகிறது.

மாவட்டக் கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் நினைவுநாள் கூட்டத்திற்கு தலைமை வகித்து கே.எஸ்.எம்.மணிமுத்து படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார். இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்துகிறார்கள். நினைவு நாள் கூட்டத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்குகிறார்.

இந்த நினைவு நாள் கூட்ட ஏற்பாடுகளை கே.எஸ்.எம்.மணிமுத்து குடும்பத்தினர் மற்றும் சிவகங்கை மாவட்டக் கழகத்தினர் செய்து வருகிறார்கள்.



தாம்பரத்தில் புதியதாக முதல்வர் அவர்கள் கடந்த 9 ஆம் தேதியன்று திறந்து வைத்த தாம்பரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா மருத்துவமனைக்கு சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு,மருத்துவர்கள் மற்றும் நோயாளிகளின் தேவைகளை கேட்டறிந்தார். உடன் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை தலைவர் டாக்டர் சி.பழனிவேல், மாமன்ற உறுப்பினர் சி.சுரேஷ்,மு.வினோத், மாநகர பிரதிநிதி மா.கன்னியப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

# எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பயனாளிகளுக்கு உரிய ஆவணம் வழங்கி சிறப்பித்தார்!

சென்னை, ஆக.15-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய" போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 5 வார்டு-61 ல் அமைந்துள்ள புனித அந்தோணியார் சமூக மண்டபம், திருவேங்கடம் தெரு, புதுப்பேட்டை சென்னை -600002 என்ற விவாதத்தில் நேற்று (14.8.2025) வியாழக்கிழமை நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் பல்வேறு கோரிக்கைகளுக்காக





முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்..2மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 100 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்.

ஆதார் இணைய சேவைகள் மனு 12 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 35 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 8 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 17 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம்- 99 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 5 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -1 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும் கலைஞர் மகளிர் உரிமை தொகை -719 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும் இதர மனுக்கள் -141 என மொத்தமாக 1384 மனுக்கள் பெறப்பட்டு அதில் 1351 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், தமிழன் பிரசன்னா, எழும்பூர் தெற்கு பகுதிகளாக செயலாளர் வி.சுதாகர், மாமன்ற உறுப்பினர் பாத்திமா முஸாபர், வட்ட கழக செயலாளர்கள், இ மொய்தின், டால்பின் ஹரி, மற்றும், எஸ் ரசூல், ஜெயக்குமார், வெற்றிவீரன்,மற்றும் 61, 61அ கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாவட்டம் களக்காடு நகராட்சி, 7 பேரூராட்சிக்கு ரூ.423.13 கோடி மதிப்பீட்டில்

# தாமிரபரணி கூட்டுக் குடிநீர் - திசையன்விளை பேரூராட்சி 12,000 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு!

## பேரவைத்தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை, ஆக.15-

திருநெல்வேலி மாவட்டம், களக்காடு நகராட்சி, 7 பேரூராட்சி பகுதிகளுக்கு ரூ.423.13 கோடி மதிப்பீட்டில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.நேற்று முன் தினம் (13.08.2025) திசையன்விளை பேரூராட்சியில் உள்ள 12000 ம் வீடுகளுக்கு குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்கும் பணியினை சட்டப் பேரவைத்தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில் மாவட்ட ஊராட்சித்தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

பின்னர் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள் முதல் மக்களுக்காக பல்வேறு எண்ணற்ற சிறப்பு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி,இராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட களக்காடு நகராட்சி,நாங்குநேரி உட்பட 7 பேரூராட்சிகளுக்கு சென்னையை போன்று குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைக்கும் வகையில் ரூ.423.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்து சேரன்மகாதேவி தாமிரபரணி ஆற்றில் இருந்து நீர் ஆதாரம் எடுத்து திரு வித்தான்புள்ளியில் வந்து நீர் சுத்திகரிப்பு செய்து அங்கிருந்து களக்காடு நகராட்சி,ஏர்வாடி, திருக்குறுங்குடி, நாங்குநேரி, பணகுடி,மூலைக்கரைப்பட்டி, திசையன்விளை, வடக்கு வள்ளியூர் ஆகிய அனைத்து பேரூராட்சிகளுக் கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கொண்டு செல்லப்பட்டு மேல் நிலை நீர்தேக்க தொட்டிகளில் சேமிக்கப்பட்டு அனைத்து இல்லங்களுக்கும் வழங்கப்பட உள்ளது.இப்பணிகள் 75 சதவீதம் முடிவுற்றுள்ளது.விரைவில் இப்பணிகள் முடிக்கப்பட்டு அக்டோபர் மாதம் இறுதிக்குள் இல்லங்களுக்கு குடிநீர் வழங்கப்படும். இதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

முதற்கட்டமாக திசை யன்விளை பேரூராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுக ளுக்கும் இணைப்புகள் வழங்கும் பணி இன்று தொடங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6 பேரூராட்சிகளிலும் விரைவில் தொடங்கி அனைத்து இல்லங்களுக்கும் இணைப்புகள் வழங்கப்பட்டு திருவித்தான் புள்ளியில் இருந்து குடிநீர் விநியோகிக் கப்பட்டு தாமிரபரணி கூட்டு குடிநீர் களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் கிடைக்கப்பட உள்ளது. இப்பணிகளுக்காக சாலைகள் மற்றும் தெருக்களில் குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகள் விரைவாக அமைக்கப்பட்டு வருகிறது.சோதனை ஓட்டங்கள் முடிந்த பிறகு பழுதடைந்த சாலை மற்றும் தெருக்கள் சரி செய்யப்படும். இப்பகுதி மக்களுக்கு நீண்ட நாள் எதிர்பார்ப்பாக இருந்த தாமிரபரணி கூட்டு குடிநீர் அனைவருக்கும் கிடைக்கபெறவுள்ளது. இதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு இப்பகுதி மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மக்களின் அன்றாட தேவைகளை அறிந்து மக்களின் நலன் கருதி பல்வேறு சீர்மிகு திட்டங்களை ஒவ்வொரு நாளும் கொண்டு வந்து தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறார்கள். அனைத்து தரப்பு மக்களையும் சமமாக நினைத்து தமிழ்நாட்டில் கொண்டுவரப்பட்டு வரும் அனைத்து திட்டங்களும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமை தொகை விடுபட்டவர்கள் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது,தகுதியான நபர்களுக்கு விரைந்து வழங்கப்படும்.மேலும் உங்களுடன் ஸ்டாலின்,நலன் காக்கும் ஸ்டாலின் போன்ற பல்வேறு திட்டங்கள் பகுதி வாரியாக சிறப்பாக நடைத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கானோர் பயனடைந்து வருகின்றனர்.மேலும் விரைவில் கிராம ஊராட்சிகளுக்கும் தாமிர பரணி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் அனைத்து இல்லங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட உள்ளது. மக்கள் நலனிலே அக்கறையாக செயல்படும் முதலமைச்சர் அவர்களுக்கு நாம் எப்போதும்நன்றிகடன்பட்டவர்களாக இருப்போம்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி குரோம்பேட்டை ராதா நகர் ரயில்வே சுரங்கப்பாதை (எல்.சி 27) தற்போது ரயில்வே மற்றும் நெடுஞ்சாலை துறை பணிகள் வேகமாக நடந்து முடியும் தருவாயில் உள்ளன பணிகள் முடித்து உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்து பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, நெடுஞ்சாலை துறை அதிகாரிகளுடன் சென்று தென்னக ரயில்வே சென்னை மண்டல மேலாளர் சைலேந்திர சிங் அவர்களை நேரில் சந்தித்து பணிகளை எவ்வாறு விரைவாக முடிப்பது என்பது குறித்து ஆலோசனை நடத்தினார் அப்பொழுது மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, ரயில்வே மண்டல தலைமை பொறியாளர் ராம்ப்ரசாத் ரயில்வே மண்டல திட்ட பொறியாளர் சந்திர பிரகாஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.